[9th August 1960

Wage Board for plantation workers

54 Q.—Sri N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to constitute a Wage Board for plantation workers;

(b) whether this Government have represented to the Centre to exclude Madras State from the constitution of Wage Board; and

(c) if so, the reasons therefor?

The Hon. Sri R. VENKATARAMAN: (a) Yes. The Government of India have proposed to constitute three Wage Boards for Plantation Industry, one each for tea, coffee and rubber plantations.

(b) No, Sir. But we have expressed our doubts about the effectiveness of Wage Boards in the solution of wage problems.

(c) Does not arise.

State Board of Education

* 55 Q.—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is a proposal to establish a State Board of Education; and

(b) if so, when?

The Hon. Sri C. SUBRAMANIAM: (a) No, Sir.

(b) Does not arise.

Pig-iron smelting furnaces

* 56 Q.—Sri M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) தேனிரும்பு உற்பத்தி உலைகள் நிறுவ அனுமதி கோரி எத்தனை மனுக்கள் வந்தன?

(ஆ) அவைகளில் எத்தனைக்கு அனுமதி வழங்கப்பட்டன?

(இ) இதுவரையில் எத்தனை உலைகள் நிறுவப்பட்டுள்ளன? எங்கெங்கே?

(ஈ) அவைகளில் அரசாங்கம் பங்கு கொண்டு உள்ளதா? எந்த அளவுக்கு?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) It is presumed that the hon. Member refers to applications to set up factories for manufacture of pig-iron. During 1956–57, five such applications were received. There have been no applications in subsequent years.

(ஆ) Three of the applicants have been granted licences. The other two have withdrawn their applications.

9th August 1960]

(இ) A pig-iron plant has been installed in Coimbatore.

(ஈ) The Government have not participated in the capital structure of any of these projects.

SRI M. P. SARATHI : ஸார், முதல் கேள்விக்கு உண்டான பதிலையே தமிழிலே சொன்னால் நாங்கள் உப கேள்விகள் கேட்க முடியும். அந்த வகையில் சர்க்கார் முதல் கேள்விக்கும் தமிழிலேயே பதில் கொடுத்தால் நல்லது.

THE HON. SRI R. VENKATARAMAN : தேனிரும்பு என்பதற்கு "பிக் அயர்ன்", "ராட் அயர்ன்" என்று இரண்டு விதமான "ட்ரான்ஸ்லேஷன்" இருக்கிறது. தாங்கள் கேட்பது "பிக் அயர்ன்" என்று எடுத்துக்கொண்டு சர்க்கார் பதில் அளிக்கிறது. 1956-57-ல் ஐந்து அப்ளிகேஷன்கள் வந்தன. அதில் மூன்று பேர்களுக்கு லைசன்ஸ் கொடுக்கப்பட்டது. இரண்டு பேர்கள் வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். தேனிரும்பு "ப்ளாண்ட்" கோயம்புத்தூரில் வைக்கப்பட்டிருக்கிறது.

SRI M. P. SARATHI : அந்த மூன்று அப்ளிகேஷன்கள் எந்தெந்த இடங்களிலிருந்து வந்தன ?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒன்று கோயம்புத்தூர் ; இரண்டாவது கலிங்கா இண்டஸ்ட்ரீஸ், கல்கத்தா ; மூன்றாவது சௌந்தரராஜன் கம்பெனி, சென்னை.

SRI K. ANBAZHAGAN : சென்னை மாநிலத்தில் சிறு தொழில்களுக்கு இந்தத் தேனிரும்புத் தேவை மிகுதியாக இருக்கும் காரணத்தினால் அரசாங்கமே இப்படிப்பட்ட இரண்டு, மூன்று தொழிற்சாலைகளை ஏற்படுத்த முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்காகத்தான் இப்போது ஏராளமான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். தேனிரும்பைப் பொறுத்தவரையில் நம் ராஜ்யத்தில் இருக்கும் இரும்புச் சத்து மிகவும் குறைவு என்று ஆராய்ச்சியிலிருந்து தெரிந்திருக்கிறது. ஆகவே, சிறு தொழில்களாக ஆரம்பிக்க முடியாது. பெரிய தொழிலாகத்தான், குறைந்த பட்சம் 3 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய தொழிலாகத்தான் ஆரம்பிக்க வேண்டும்.

SRI J. MATHA GOWDER : கோயம்புத்தூரில் ஒரு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அங்கு எந்த இடத்திலிருந்து தேனிரும்பு கிடைக்கிறது என்று சொல்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : பல இடங்களில் கிடைக்கிறது. நீலகிரியிலும் கிடைக்கிறது.

SRI S. NAGARAJA MONICAR : இந்தக் கேள்வி கேட்ட கனம் எம். பி. சாரதி அவர்கள் மூன்று அப்ளிகேஷன்கள் என்று சொன்னார்கள். "அப்ளிகேஷன்" என்றால் என்ன என்று எனக்கு விளங்கவில்லை.

[9th August 1960

MR. SPEAKER : The question is out of order.

Use of iron removed from Madras tram lines

* 57 Q.—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

சென்னையிலுள்ள டிராம் லைன்களிலிருந்து கிடைக்கும் இரும்பு இம் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளிலேயே வேலைக் காகும் பொருள்களுக்கு உபயோகப்படுத்த அப் பொருள்களை இங்கேயே வினியோகிக்க அரசாங்கம் வகைசெய்ய உத்தேச முண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The possibilities of allotting the tram rails to the Rerolling Mills in this State to produce some specified materials which are in great demand were explored and in view of the lack of response on the part of the Rolling Mills, the proposal was dropped.

SRI A. VEDARATHNAM : இங்கு அந்த இரும்பைப் பயன் படுத்த முடியவில்லையானல் இப்போது அதை என்ன செய்திருக் கிருர்கள் ? வெளி நாட்டுக்கு எங்காவது கொண்டு போகப் போ கிருர்களா ? இப்போது கண்ட்ரோல் ஆர்டர் இருக்கும் காரணத் தால் இந்த மாநிலத்திற்கு வந்த இரும்பை வெளியே கொண்டு போகலாமா ? இதைப் பயன்படுத்த தனியார்கள் முன்வரவில்லை யானல் அரசாங்கமே ஏன் எடுத்துப் பயன்படுத்தக் கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் ஐந்தாறு கேள்விகள் இருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில் இருக்கும் "ரீ-ரோலிங்" மில்லில் இதை உபயோகப்படுத்த முடியவில்லை யென்று சொல்லிவிட்டார்கள். வெளி ராஜ்யத்திலிருந்து வாங்கிய கம்பெனியார் வெளி ராஜ்யத்திற்கு எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். சென்னை சர்க்கார் "ரீ-ரோலிங்" செய்ய வேண்டு மென்ருல் "ரீ-ரோலிங் மில்" வேண்டும். அது இப்போது இல்லை.

SRI R. SRINIVASA IYER : அந்தத் தண்டவாளங்கள் இப் பொழுது எந்த இராஜ்யத்திற்கு எடுத்துக்கொண்டு போகப்படு கின்றன ? அந்த இராஜ்யத்திலுள்ள ரீ-ரோலிங் மில்லிலே இந்த இராஜ்யத்தின் சார்பாக அவைகளை 'ரீ-ரோல்' செய்து நமக்குத் தேவையான இரும்பு சப்ளை செய்யக் கூடிய வகையில் சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I want to remind the hon. Member that he can put questions which are within the competence and jurisdiction of this Ministry. I do not know what they have done with these rails which they have produced and whether they have exported them and all that.

SRI A. GOVINDASAMI : தண்டவாளங்களைப் பெயர்த்து எடுத்ததில் சர்க்காருக்குக் கிடைத்த தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒன்றும் இல்லை.